# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TITTAGUDI.

**CC . No . 7/2015** L.W.6 **P.W.6**

Name : சீமான்
Father/Husband Name : தவசு
Age : 60
Village : பெ.பூவனூர்
Taluk : திட்டக்குடி
District : கடலூர்

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **05.12.2022**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

1. நான் பெ.பூவனூரில் குடும்பத்துடன் வசித்து விவசாய வேலை செய்துவருகிறேன். எனக்கு அ.சா.1 முதல் அ.சா.5 மற்றும் ஆஜர் எதிரிகளை தெரியும். எனக்கு இந்த வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாது. நான் சமூகம் நீதிமன்றத்தின் அழைப்பாணையை பெற்று சாட்சியம் சொல்ல வந்துள்ளேன். போலிஸார் அங்கு வந்து விசாரிக்கும்போது பிரச்சனை பற்றி எனக்கு தெரியாது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பமும் என்னுடையதுதான். அந்த கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.2** ஆகும். மேற்ச்சொன்ன கையொப்பத்தை ஏதோ ஒரு வழக்குசம்மந்தமாக போலிஸார் கேட்டுக்கொண்டதற்கிணங்க போட்டேன். போலிஸார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சி பிறழ்சாட்சியாக கருதி, அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் இ.சா.ச.பிரிவு 154 (1) ன் கீழ் குறுக்கு விசாரணை**

கடந்த 01–06–2014 ம் தேதி மாலை 3.30 மணிக்கு எங்கள் ஊர் மேல் நிலை தண்ணீர்தொட்டி அருகே நானும், அ.சா.5 சுரேஷ் என்பவரும் நின்று பேசிக்கொண்டிருந்தாகவும் அப்போது பெண்ணாடம் காவல் உதவி ஆய்வாளர் அங்குவந்து அன்றை தினம் காலை அ.சா.1 ன் குடும்பத்தினரை ஆஜர் எதிரிகள் காம குரோதமான வார்த்தைகளால் திட்டி, அடித்து கொலை மிரட்டல் விடுத்த சம்பவம் சம்மந்தமாக எங்கள் இருவர் முன்னிலையிலும் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயாரித்து நாங்கள் இருவரும் அதே இடத்தில் வைத்து சாட்சி கையொப்பம் போட்டுவிட்டு தற்போது ஆஜர் எதிரிகள் எனது ஊர்க்காரர்கள் என்பதால் வழக்கு சம்பவம் தெரியாது என்றும், பார்வை மகசரில் உள்ள முதலாவது கையெழுத்து தன்னுடையது. எதற்காக போட்டேன் என்று தெரியவில்லை என உண்மைக்கு மாறாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.